**மத்திய கலால் வரி துறை ஆணையகம் (தணிக்கை),**
**கலால் வரி, சுங்கம் மற்றும் சேவை வரி துறை,**
**6/7 ஏ.டி.டி. வீதி, பந்தய சாலை,கோயம்புத்தூர் – 641018**

**விருப்ப கேட்பு விண்ணப்ப விளம்பரம்**
**(டெண்டர்)**

மத்திய கலால் வரி துறை ஆணையர்,(தணிக்கை), கலால் வரி, சுங்கம் மற்றும் சேவை வரி துறை, கோயம்புத்தூர் அலுவலகத்திற்கு, சுமார் 22,000 சதுர அடி அளவு உள்ள கட்டிடம் கோயம்புத்தூர் நகரில் அலுவலக உபயோகத்திற்கு வாடகைக்காக கட்டிட உரிமையாளர்களிடம் இருந்து விருப்ப கேட்பு விண்ணப்பம் (டெண்டர்) கோரப்படுகிறது.

வாடகைக்காக கோரப்படும் கட்டிடம் எந்தவித வில்லங்கங்கள் இல்லாமல் சுத்த கிரய உரிமையுடன் இருக்க வேண்டும். கோரப்படும் கட்டிடம் நகரில் மத்திய பகுதியில் அமைந்திருபபதுடன், போக்குவரத்து வசதி உள்ள பகுதியில் இருக்க வேண்டும்; மற்றும் வாகன நிறுத்தம், லிப்ட் வசதி, ஜெனரேட்டர் வசதி, போதுமான காற்று மற்றும் வெளிச்சம், தீயணைப்பு வசதிகள், தண்ணீர் தொட்டி, கழிப்பிட வசதி, பாதுகாப்பான குடிநீர் வசதி, மாற்று திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் சுலபமாக வந்து செல்லும் வசதி போன்ற பொது வசதிகள் இருத்தல் அவசியம்.

விருப்பம் உள்ள கட்டிட உரிமையாளர்கள் **முத்திரையிட்ட இரண்டு உறைகளில்** தங்களுடைய விருப்பங்களை கீழ்கண்டவாறு சமர்பிக்க வேண்டும்.

தொழில் நுட்பத் தகவல் அடங்கிய முத்திரையிட்ட முதல் உறையில் கட்டிட முகவரி, அமைந்துள்ள இடம், கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் கட்டிடத்தில் அமைந்துள்ள வசதிகள், கட்டிடம் கட்டப்பட்ட வருடம், உரிமையாளர்கள் விதிக்க விரும்பும் நிபந்தனைகள் குறிப்பிடபட்டும், உரையின் மேற்புறம் **"கட்டிடம் வாடகைக்கு – தொழில் நுட்பத் தகவல்"** என்று தலைப்பிடபட்டும் அனுப்ப வேண்டும்.

இரண்டாவது முத்திரையிட்ட உறையில் கட்டிட உரிமையாளர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் வாடகை விவரங்களை குறிப்பிட்டு, உரையின் மேற்புறம் **"கட்டிடம் வாடகைக்கு – வாடகை பற்றிய தகவல்"** என்று தலைப்பிடப் படவேண்டும். மேற்கண்டவாறு டெண்டர் அளிக்கும் கட்டிட உரிமையாளர்கள், அந்த கட்டிடத்தை 5 வருட காலத்திற்கு வாடகைக்கு அளிக்க சம்மதம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

உரிமையாளர்கள் கோரும் வாடகையானது, மத்திய பொதுப்பணித்துறையால் பரிந்துரைக்கப்படும் தொகைக்கு உட்பட்டது.

முத்திரையிடப்பட்ட விருப்ப கேட்பு விண்ணப்பம் (டெண்டர்), இந்த விளம்பரம் வெளியான **15 நாட்களுக்குள்** கீழ்கண்ட அலுவலக முகவரியை வந்து அடைய வேண்டும்.

டெண்டரில் தேர்வு செய்யப்படும் கட்டிட உரிமையாளர்கள் மேற்கண்ட கட்டிடத்தை அலுவலக தேவைக்கேற்ப, தங்களின் சொந்த செலவில் பிரிவுகள் (பார்ட்டிசன்) அமைத்து தர வேண்டும்.தொழில் நுட்ப தகவல் அடங்கிய மேற்படி விருப்ப கேட்பு விண்ணப்பம் (டெண்டர்) **5-12-2014** அன்று பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும்.

மேற்படி விருப்ப கேட்பு விண்ணப்பம் (டெண்டர்) அனுப்ப வேண்டிய முகவரி:

**மத்திய கலால் வரி துறை ஆணையர்(தணிக்கை),**
**கலால் வரி, சுங்கம் மற்றும் சேவை வரி துறை,**
**6/7 ஏ.டி.டி. வீதி, பந்தய சாலை,கோயம்புத்தூர் – 641018.**

**/ஒப்பம்/**
(ஆர்.கே. ரௌத்ரே)
ஆணையர்

கோயம்புத்தூர்
14-11-2014